# ஆதித் தமிழரும் மீன்பிடித் தொழிலும்

# Adi Tamils and the Fishing Industry

***முனைவர் பொ. திராவிடமணி***
உதவிப் பேராசிரியர்
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி(த), தஞ்சாவூர்

**Dr. P. Dravidamani**
*Assistant Professor*
*Kundavai Nachiyar Government Arts College for Women, Thanjavur*

## ஆய்வுச் சுருக்கம்

*மீன்பிடித் தொழில் என்பது நெய்தல் நில மக்களின் முதன்மையான தொழிலாக விளங்கியது.. சங்க காலத்திலேயே பெருங்கடலில் சென்று மீன்பிடித்த பரதவர்கள், அத்தொழிலில் சிறந்து விளங்கியிருந்தனர் கடலின் நுட்பமறிந்து பகலில் மட்டுமல்லாது இரவிலும் விளக்குளின் உதவியுடன் கடலுக்குள் சென்று மீன்பிடித்து வந்துள்ளனர். சிறிய மீன்கள் முதல் கொம்புகளையுடைய கொடிய சுறா, திமிங்கிலம் போன்ற பெரிய மீன்கள் வரைபிடிக்கும்திறன்பெற்றவர்களாவும், நுட்பம் அறிந்தவர்களாகவும் இருந்துள்ளனர்.*

***முக்கியச்சொற்கள்:*** *மீன்பிடித் தொழில், பரதவர்கள், நெய்தல் நிலம், மீனவச் சமூகம், ஆழ்கடல்*

## Abstract

*Fishing was the primary occupation of the people of Neithal land. During the Sangam age, the Bharatas, who had ventured into the ocean and fished in the sea, had excelled in this profession and had understood the subtleties of the sea and had ventured into the sea not only during the day but also at night with the help of lamps. From smaller fish to big fish, such as the horned deadly shark and the whale, they were capable of catching and were familiar with the technique.*

***Keywords:*** *Fishing Industry, Bharatavars, Neithal Land, Fishing Community, Deep Sea.*

**Citation**

Dravidamani, P. "Adi Tamils and the Fishing Industry." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 4, 2023, pp. 1–6.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20135530*

*மீன்பிடித் தொழில் என்பது நெய்தல் நில மக்களின் முதன்மையான தொழிலாக விளங்கியது. சங்க காலத்திலேயே பெருங்கடலில் சென்று மீன்பிடித்த பரதவர்கள், அத்தொழிலில் சிறந்து விளங்கியிருந்தனர் கடலின் நுட்பமறிந்து பகலில் மட்டுமல்லாது இரவிலும் விளக்குளின் உதவியுடன் கடலுக்குள் சென்று மீன்பிடித்து வந்துள்ளனர். சிறிய மீன்கள் முதல் கொம்புகளையுடைய கொடிய சுறா, திமிங்கிலம் போன்ற பெரிய மீன்கள் வரை பிடிக்கும் திறன் பெற்றவர்களாவும், நுட்பம் அறிந்தவர்களாகவும் இருந்துள்ளனர்.*

*மீனவச் சமூகம் கடலை வகைப்படுத்தும் மூன்று சொற்கள் இவை. கரைக்கடல் என்பது கரையை ஒட்டியுள்ள கடல். அண்மைக் கடல் என்பது கரை கடலுக்கு அப்பால். ஆழ்கடல் என்பது அண்மைக் கடலுக்கும் அப்பால். உத்தேசமாக , கரையிலிருந்து முதல் ஆறு நாட்டிக்கல் மைல் தொலைவைக் கரைக்கடல் என்றும், அடுத்த ஆறு நாட்டிக்கல் மைல் தொலைவை அண்மைக் கடல் என்றும், அதற்கு அப்பாற்பட்ட தொலைவை ஆழ்கடல் என்றும் சொல்லலாம் (சமஸ் நீர் நிலம் வனம் கடல் பக்33-34) சங்க காலக் கடலோடிகளாகிய பரதவர்கள் அண்மைக் கடல்வரை சென்று மீன் பிடித்திருப்பர் எனலாம்.*

*கடலோடிகள் கடலுக்குச் செல்வதற்கு நேரம் காலம் எல்லாம் கிடையாது. கடல் சூழல் நன்றாக இருந்தால், அவரவர் தொழில் தேவைக்கேற்பக் கடலுக்குள் இறங்கிவிடுகிறார்கள். அதிகாலை 2 மணிக்குப் புறப்பட்டுக் காலை 8 மணிக்குள் மீன்களோடு கரைக்குத் திரும்பிவிடும் கடலோடிகளும் உண்டு. மீன் கிடைக்காமல் இரண்டு மாதங்கள் வரை காத்திருந்து பிடித்து வருபவரும் உண்டு (சமஸ் நீர் நிலம் வனம் கடல் ப-34) என்று சமஸ் இன்றைய மீனவர்கள் கடலுக்குச் செல்லும் காலநிலை குறித்துக் குறிப்பிடுகின்றார். கிட்டத்தட்ட இதே நிலைதான் சங்க காலத்திலும் இருந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறியமுடிகிறது.*

***நெடுங்கடல் அலைத்த கொடுந்தமிற் பரதவர் (நற்றிணை 175)***
***உரவுக்கடல் உழந்த பெருவலைப் பரதவர் (நற்றிணை 63)***
***பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர் (நற்றிணை 219)***

*என்ற வரிகள் பரதவர் மீன்பிடித் தொழிலில் சிறந்திருந்ததைக் காட்டுகின்றன. பரதவர்கள் நீண்ட கயிற்றிலே கட்டப்பட்ட, குறுகிய கண்களையுடைய வலையினால், கடலின் வளமெல்லாம் குன்றும்படியாக, கூட்டமான மீன்களை முகந்து வருவார்கள். இளையவரும் முதியவருமாய் ஒன்றாகக் கூடி கரையிலே கொண்டுவந்து மீன்களைக் கொட்டுவார்கள். தாங்கள் பிடித்துவந்த மீனை வறியவர்களின் பாத்திரங்கள் நிறையும்படி வழங்குவார்கள், பின், பல கூறுகளாகப் பிரித்து விலைகூறி விற்பார்கள். (அகநானூறு 30) இதுதான் சங்க காலப் பரதவர்களின் வாழ்க்கை. என்பதை அகநானூறு மிகத் தெளிவாக விளக்கும்.*

***நாள்வலை முகந்த கோள்வல் பரதவர் (அகநானூறு 300: 1)***

*எனும் அகநானூற்றுப் பாடல் அடி பரதவர்கள் பகலில் சென்று மீன்பிடித்ததைத் தெரிவிக்கிறது.*

*பகலில் மட்டுமல்லாது இரவிலும் பரதவர்கள் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றள்ளனர். பெரும்பாலும் கொழுமீன் என்று குறிப்பிடப்படும் சுறா, திமிங்கிலம் போன்ற பெரிய மீன்களை இரவில் சென்று பிடித்துள்ளதைச் சங்க இலக்கியப் பாடல்களின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.*

*அவ்வாறு இரவு நேரத்தில் செல்லும்பொழுது மீன்பிடிப் படகில் விளக்கை ஏற்றிக்கொண்டு சென்றுள்ளனர். இதனை அகநானூறு*

***கொண்டல் இரவின் இருங் கடல் மடுத்த***
***கொழு மீன் கொள்பவர் இருள் நீங்கு ஒண் சுடர் (அகநானூறு 100:6-10)***

*என்கிறது. மேகஞ் சூழ்ந்த இரவினில் பெரிய அலையின் ஒலி அடங்கிற்று. அலையும் ஓய்ந்தது, கரிய கடலிலே கொழுமீனைப் பிடிக்கும் பரதவர்கள் , இருள் நீங்குவதற்காகத் தம் தோணியிலே விளக்குகளைக் கொளுத்திக் கொண்டு செல்வர் என்பது பொருள்.*

*அவ்வாறு, இரவில் கடலுக்குள் பரதவர்கள் மரக்கலங்களில் ஏற்றிவைத்த விளக்கு முதிரா இளஞ்சூரியனைப் போல் தோன்றமளித்ததாக நற்றிணை தெரிவிக்கிறது.*

***பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்***
***கங்குல் மாட்டிய கனை கதிர் ஒண் சுடர்***
***முதிரா ஞாயிற்று எதிர் ஒளி கடுக்கும் (நற்றிணை 219 :6-8)***

*மீன்களை வேட்டையாட பரதவர்கள் திண்ணிய படகில் விளக்குகளை ஏற்றிக் கொண்டு நள்ளிரவில் செல்வர். திமிங்கலத்தை வேட்டையாடத் தேவையான வன்மை மிக்கப் புரிகளால் ஆன கயிற்றின் நுனியில் கட்டிய எறிகின்ற உளியுடன் செல்லும் அவர்கள் பெரிய கடலில் பிடித்த மீன்களுடன் விடியற்காலையில் கடற்கரைக்கு வந்து, கழிக்கரைச் சோலையில் குவித்துவைப்பர். (நற்றிணை 388) என்று குறிப்பிடுவதால் திமிங்கிலம் போன்ற பெரிய மீன்களைப் பிடிக்க உளியைப் பயன்படுத்தியுள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.*

*கடலில் மட்டுமல்லாது கடலைச் சூழ்ந்திருக்கும் கழிகளிலும் இரவு நேரத்தில், குளிரால் நடுங்கும் பரதவர்கள், திண்ணிய மீன்பிடி படகில் விளக்குகளை ஏற்றி வைத்து மீன்களைப் பிடித்துள்ளனர். எத்தனை படகுகளில் மீன்பிடிக்கின்றனர் என்பதை அறிய விரும்பிய ஊரார் படகில் எரியும் விளக்குகளை எண்ணினர். இதனை*

***இருங்கழித் துழாவும் பனித் தலைப் பரதவர்***
***திண் திமில் விளக்கம் எண்ணும்***
***கண்டல் வேலிக் கழி நல் ஊரே (நற்றிணை 372)***

*என்று நற்றிணைப் பதிவு செய்துள்ளது. இதன் மூலம் இரவு நேரத்தில் விளக்குகளின் உதவியுடன் பரதவர்கள் கழிகளிலும் மீன்பிடித் தொழில் ஈடுபட்டதை அறியமுடிகிறது. மேலும்,*

*நெடிய கடலில் சென்று வலை வீசி உடலை வருத்திப் பிடித்து வந்த கொழுவிய மீன்களை மணற்பரப்பில் குவித்துவைத்துவிட்டு, மீன் கொழுப்பாலாகிய நெய்யை வார்த்துக் கிளிஞ்சலில் ஏற்றிய சிறிய சுடர் விளக்கின் ஒளியில் துயில்வர் என்பதை நற்றிணை சுட்டுகிறது.*

***நெடுங் கடல் அலைத்த கொடுந் திமிற் பரதவர்***
***கொழு மீன் கொள்ளை அழி மணல் குவைஇ,***
***மீன் நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய***
***சிறு தீ விளக்கில் துஞ்சும் (நற்றிணை :175 :1-4)***

*சங்க காலத்தில் மீனின் கொழுப்பை உருக்கி விளக்குகளுக்கு எண்ணெய்யாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. மீன்பிடி விளக்குகளில் மட்டுமல்லாது. வீடுகளிலும் மீன் கொழுப்பைச் சேர்த்து உருக்கிய நெய்யை ஊற்றியே விளக்கேற்றியுள்ளனர்.*

***இலங்கு வளை மகளிர் வியல் நகர் அயர,***
***மீன் நிணம் தொகுத்த ஊன் நெய் ஒண் சுடர் (நற்றிணை 215:4-5)***

*எனவே திமிங்கிலம், சுறா போன்ற பெரியவகை மீன்கள் உணவுக்காக மட்டுமல்லாது எண்ணெய்க்காகவும் அக்காலத்தில் மிகுதியாகப் பிடித்திருக்க வேண்டும்.*

*ஒரு நீலத் திமிங்கிலக் குட்டி பிறக்கும்போதே ஒரு யானை எடையோடு, 25 அடி நீளத்தில் பிறக்கும். கொஞ்சம் வளர்ந்ததும் கூனிப்பொடிக் கூட்டத்தைச் சாப்பிடத் தொடங்கும். இவை நன்கு வளர்ந்த நிலையில், சுமார் 40 யானை எடையோடு இருக்கும்போது ஒரு நாளைக்கு நான்கு டன் அளவுக்குக் கூனிப்பொடிக் கூட்டத்தைக் கபளீகரம் செய்யும். சராசரியாக, 70 ஆண்கள் வரை வாழக்கூடியவை திமிங்கிலங்கள் அபாரமாக நீந்தக் கூடியவை. சில வகைத் திமிங்கிலங்கள் வலசைபோகும் பருவநிலைக்கு ஏற்ப இடம் மாற்றிக்கொண்டு, வலசை செல்லும் திமிங்கிலங்கள் ஆண்டுதோறும் பல்லாயிரம் கடல் மைல்கள் பயணிக்கும். வலசை செல்லும் பாலூட்டிகளில் மிக நீண்ட தொலைவு செல்லக்கூடியவை திமிங்கிலங்கள் (சமஸ் நீர் நிலம் வனம் கடல் ப-47) என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. மேற்கத்தியர்கள் பின்னாளில் எண்ணெய்க்காகத் திமிங்கிலங்களை வேட்டையாடியதற்குப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே திமிங்கில வேட்டையாடியவர்கள் தமிழர் எனலாம்.*

*கடலாகிய சுரத்தில் திரிந்து வருந்திய திண்மையான படகின் விளக்கொளியில், தான் பிடித்துவந்த பலவகை மீன் இனங்களை என் அண்ணன்மார்க்குக் காட்டுவதற்காக அவர்களை என் தந்தையும் அழைத்துச் செல்வார் எனும் அகநானூற்றுப் பாடலும் இங்குக் குறிப்பிடத்தக்கது.*

***...........நளிகடல்***
***திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்***
***பல்மீன் கூட்டம் என்னையர்க் காட்டிய,***
***எந்தையும் செல்லுமார் (அகநானூறு 240: 4-6).***

*மேற்கண்ட சான்றுகளின் மூலம் சங்க காலத்திலேயே இரவிலும் மீனவர்கள் கடலுக்கு மரக்கலங்களில் மீன்பிடித் தொழிலுக்குச் சென்றுள்ளனர் என்பதையும். வெளிச்சத்திற்காக விளக்குகளைப் பயன்படுத்தியதையும், கிளிஞ்சல்களை விளக்காகவும் மீனின் கொழுப்பை எண்ணெய்யாகவும் பயன்படுத்தியதையும் அறிந்துகொள்ள முடிகிறது.*

**கரையொதுங்கும் சுறா**

*சில நேரங்களில் மீனவர்களின் எவ்வித முயற்சியும் இல்லாமலேயே சுறா மீன்கள் கரையொதுங்கும் பொழுது அம்மீனை அறுத்து தாமும் தின்று மணம் கமழ்கின்ற பாக்கத்தில் உள்ள பலர்க்கும் பகுத்துக் கொடுத்துள்ளனர். இது போன்ற மீன்கள் பரதவர்களின் தாக்குதலுக்கு ஆட்பட்டு, தப்பித்துப் பிற்பாடு வலியழிந்து கரையொதுங்கியிருக்கலாம்.*

*பழந் திமில் கொன்ற புது வலைப் பரதவர்*
*மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி,*
*மணல் கமழ் பாக்கத்துப் பகுக்கும் (அகநானூறு 10:10-13)*

*பரதவர்கள் அக்காலத்திலே கடலில் தங்கி மீன்பிடிக்கும் வழக்கம் உடையவர்களாக இருந்துள்ளனர்.*

*பெருங் கடற் பரப்பில் சேயிறா நடுங்க,*
*கொடுந் தொழில் முகந்த செங் கோல் அவ் வலை*
*நெடுந் திமில் தொழிலொடு வைகிய தந்தை (அகநானூறு 60:1-3)*

*கடல் பரப்பில் சிவந்த இறால்மீன் நடுங்கும்படியாக மீன்களை முகக்கும் கொடிய தொழிலையுடைய நேரிய கோல்வினையினை உடைய தந்தையானவன் மீன் பிடிக்கும் தொழிலில் தங்கினான் என்கிறது அகநானூறு.*

*நெய்தல் நிலத்தில் சூழவுள்ள கழிகளில் வாழும் சினையுடன் கூடிய கயல் மீன்களைப் பாணன் தன் தூண்டிலில் இரை கௌவித்துப் பிடித்தான் என்று ஐங்குறுநூறு தெரிவித்துள்ளது.*

*அம்ம வாழி தோழி பாணன்*
*சூழ்கழி மருங்கின் நாண்இரை கொழீஇச்*
*சினைக்கயல் மாய்க்கும் (ஐங்குறுநூறு 111 : 1-3)*

*பாணன், பழந்தமிழ்க் குடிகளுள் ஒரு குடியினன், பாணன் பறையன் துடியன் கடம்பனென்று இந்நான்கல்லது குடியுமில்லை (புறம்: 355) என்ப. பாணனுக்கு மீன் பிடித்தலும் தொழில்: வலைவல் பாண்மகன் (ஐங் 48) என்புழிக் காண்க. என்பார் ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை (ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும் மருதம், நெய்தல் பக் 323)*

*சங்க இலக்கியங்களில் கடலில் சென்று மீன்படிப்பவர்கள் பரதவர், திமிலர் என்றும் கழிகளில் மீன் படிப்பவகள் பாணர், வலையர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். கடலோடிகளாகவும், மீன்படிப்போர்களாகவும் இருந்த தமிழ் கடற்கரையோர மக்களில் ஆறுவகைப் பிரிவினர் இருந்தனர். அவர்கள் கரையாளர்கள், பரவர்கள், செம்படவர்கள், வலையர்கள், பட்டனவர்கள், முக்குவர்கள் என அழைக்கப்பட்டனர் என்று ஜெயசீல ஸ்டீபன் குறிப்பிடுகின்றார் (தமிழ் மக்கள் வரலாறு ப-113) இது தொழில் சார்ந்து பிற்காலத்தில் எற்பட்ட பகுப்பு எனலாம்.*

*கடற்கரை சார்ந்த கழிகளில் அலைகள் இறால் மீன்களைக் கொண்டுவந்து தள்ளின (குறுந்தொகை 109) என்பதையும், அவ்வாறு கழிகளில் இருந்த இறால் மீனுடன் வலையை வீசித் துழாவி பிற மீன்களையும் பிடித்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.*

**இருங்கழி முகந்த செங்கோல் அவ்வலை**
*முடங்குபுற இறவோடு இனமீன் செறிக்கும் (அகநானூறு 220:16-17)*

*மீன்பிடித் தொழிலில் சிறந்து விளங்கிய பரதவர்கள் செல்வச் செழிப்புடைய இல்லத்தில் வாழ்ந்தனர் (நற்றினை -159). இருந்தபோதிலும், மீன்பிடித் தொழில் சார்ந்த நுட்பங்களை அன்றி வேறு தொழில் குறித்து அறியாதவர்களாகப் பரதவர்கள் இருந்துள்ளனர்.*

***கொழுமீன் ஆர்கைச் செழு நகர் நிறைந்த***
***கல்லாக் கதவர் தன் ஐயர் ஆகவும் (நற்றிணை 127:4-5)***

**மீன் விற்பனை**

*பெரிய கடலில் சென்று மீன்களைப் பிடித்துவந்த பரதவர் எளிதாக மீன்களை விற்றுள்ளனர் (நற்றிணை- 239), பெண்களும் பண்டமாற்று முறையில் மீன்களை விற்பனை செய்துள்ளனர்.*

***திமிலோன் தந்த கருங்கண் வயமீன்***
***தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்***
***விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்***
***கானல் அம் சிறுகுடி (அகநானூறு 320 :1-5)***

*கடலில் சென்று மீன்பிடிக்கும் திமிலோன் வலை விரித்துப் பிடித்துவந்த மீன்களைத் தழையாடை அணிந்த அழகிய பரதவப் பெண் திருவிழாக்கள் நடைபெறும் தெருக்களில் விற்றுவந்தாள்*

**துணை நூற்பட்டியல்**


1. *ஐங்குறுநூறு, மூலமும் விளக்கவுரையும், மருதம், நெய்தல், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை (உரை) அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு. சிதம்பரம். மு.ப.1957.*
2. *சங்க இலக்கியங்கள் என்.சி.பி.எச் வெளியீடு சென்னை, மு.ப. 2004.*
3. *சமஸ், நீர், நிலம், வனம் - கடல், தி இந்து வெளியீடு, சென்னை, மு.ப.2015.*
4. *விக்டர் ராசமாணிக்கம் ஞா., அருள்ராஜ் வே.சா., சங்க இலக்கியத்தில் கலங்கள். அல்மைட்டி பதிப்பகம் வெளியீடு. தஞ்சாவூர். மு.ப. 1994.*
5. *வேங்கடசாமி மயிலை.சீனி. பழந் தமிழர் வாணிகம், என்.சி.பி.எச் வெளியீடு, சென்னை, மு.ப.1995.*
6. *ஜெயசீல ஸ்டீபன் எஸ்., காலனியத் தொடக்கக் காலம் (கி.பி.1500-1800), என்.சி.பி.எச் வெளியீடு சென்னை, மு.ப. 2018.*


## References


1. Ainkurunooru, Moolamum Vilakavuraiyum, Marudham, Neithal, Olavai.. S. Duraisamy Pillai (Text) Annamalai University Publication, Chidambaram, 1957.
2. Sanga Illakiyangal, NCPH Publication, Chennai 98, 2004.
3. Samas, Neer, Nilam, Vanam - Kadal, The Hindu Publications, Chennai -2, 2015.
4. Victor Rasamanickam, G., Arulraj V.S., Sanga Ilakiyathil Kalangal, Almitti Publishing House, Thanjavur, 1994.
5. Venkatasamy Mayilai Seeni. Palam Thamilar Vaanigam, NCPH Publication, Chennai – 98, 1995.
6. Jayaseela Stephen E., Colonith Thodakka Kalam (A.D. 1500-1800), NCPH Publication, Chennai-98, 2018.